பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

இஃது,

மெய்ஞ்ஞானசொரூபராகிய

தக்கலைப்பீருமுகம்மதுசாகிபவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

ஞானமணிமாலை.

இஃது,

இராமநாதபுரம்

இரவெண்ஷாப்புக்கடை

ப-வெ-முகம்மதுஇபுறுகீம்சாகிபு

அவர்கள்முயற்சியால்

குலசேகரம்பட்டணம்

சர்க்கரைசாகிபுத்தம்பியவர்கள்குமாரர்

அல்லாபிச்சைப்புலவர்

அவர்களால்

இலக்கணவிலக்கிய வழுவறத்திருத்தி

கொல்லனூர்

மாணிக்கமுதலியார்

கம்பெனியாரவர்களது

மனோன்மணிவிலாசவச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜறத்து-௲௩௱௯௰௨ வரு-றபீயுல்ஆகிறு மீ.

பிசுமில்லாகிற்றஹ்மானிற்றஹீம்.

ஞானமணிமாலை.

விருத்தம்

திருமணியொளிவாலேகன் றிசைபுவியனைத்துஞ்சோக்
குருமணியிறசூல்தன்னைக் குவலயத்தமைத்தவன்பா
லொருமணிக்கிணையில்லாத ரெழுகியகிருபைபொங்கி
யருமணிநபிகட்கெல்லா மரசெனவகுத்தான்றூய்யோன் (௧)

துப்பவன்பழுதொன்றில்லாச் சுடர்விரிந்துயிர்களுள்ளத்
துய்யவனுருவியருப மருபமொப்புவமையில்லான்
மெய்யவன்சொரூபமல்றி வேறொன்றிற்றெரிசியாதான்
செய்யநம்பிறசூலலாத் திருமலரமருந்தேனும் (௨)

தேனகத்தினிமையேழுந் திருவெழுத்துருவாய்நிற்ற
கோனகத்தினிமையேழுங் கோன்முறைநடத்துங்கோமான்
தானகத்தினிமையேழுந் தரணிமற்றுயிர்கள்யாவும்
வானகத்தினிமையேழு வகைபலதோற்றமாமே, (௩)

வேறு.

தோற்றுமாலநபி தோழர்நால்வரொடு சொல்லிமாலியசஹ
னைசனுமென், றேற்றுநாவலர்கள் செந்தமிழ்க்கவி யிசைத்தபாட
லொடெதிர்த்தியான், சாற்றுவாறதுசெந் தாமரைக்கிணை சரு
கைமாமலர் சமைத்தல்போ லாற்றுஞ்ஞானமணி மாலைகாத்திட
லென்பனேயுனது தம்பமே. (௪)

(வெண்பா.) மருவுபுவியோனுயின் மதலைபெழுவகையா
இருவழுறுந்தோற்ற மொடுறைந்த—திருவிறசூல்
நல்லதெனவேதெளித்த ஞானமணிமாலைதனைச்
சொல்லவிறைபோனே துணை. (௫)

விருத்தம்.

துணைமுகம்மதை மன்னினிற்றோற்ற மேழ்வகையாற்
பணையமென்றிறை யவனமைசெயும் படைப்பெல்லாங்
கணையிதொருயிர் காயமுங்கோல மும்பலவாய்
மணமெய்ஞ்ஞான மாமணிமாலைக்கவ் வெழுத்தாமால் (௬)

(வெண்பா.) அவ்வலமைத்தபுவி யாகாசமேலறசை
செவ்விலிருந்தியமின் சோக—எவ்வுயிர்க்கும்
நல்லறிவையீந்தவனை நானுனது ஞானமுறைச்
சொல்லவிறைபோனே துணை. (௭)

விருத்தம்.

திருமலுக்க ரசமகிழ்ந்த செல்வனிருகண்ணற்றவன்
பெருவிறந்தியருள்பொதிந்த பீர்முகம்மதெனும்பயல்
சறகுறான்குவழியீராறு சமயநீதி கண்டவன்
இறைவனன்புபெறுந்திறனே நீடேறும்பரிசிப்பூவாம் (௮)

வேறு.

அடல்செறிசரீஅத்தென்று மகுமதர்வழியேயாகு
முடல்செறிதரீக்கத்தென்று முண்மைகள்பலவுங்காட்டுங்
கடல்பெறும்ஹக்கீக்கத்தாலே கத்தனைக்காணலாகு
மடல்செறிமஹரிபத்தால் வழியொன்றாய்வளருந்தானே (௯)

வ[illegible]த்திடுஞ்சரீஅத்தாலே வல்லமையறியொணாது
தளும்பிலாதரீக்கத்தாலே தன்மையோர்வழியைக்காட்டும்.
களிம்பிலாஹக்கீக்கத்தாலே கனல்செறிவழியைக்காட்டு
மழும்பிலாமஹரிபத்தா லாதிதன்வழியொன்றாமே (௰)

ஆதியையறியவேண்டி லழகியநிலைமைநாலா
மோதியசரீஅத்தென்று முவந்திடுதரீக்கத்தென்றும்
நீதிசேர்ஹக்கீக்கத்தென்றும் நெறியுள்ளமஹரிபத்தா
லாதியைக்காணலாமென் [illegible]குமதாருளிச்செய்தார் (௰௧)

அகுமதர்மருகராவிக் கருள்செய்தாரதனைக்கேண்மோ
சுகமதுபெறவேநாலு தோத்திரமறியவேண்டி
முகமதுசெவிகணெற்றி புருவமூக்கிடையே நோக்கில்
நலமணியொளியோற்றீப நடுவேநின்றாடுதானே (௰௨)

(வெண்பா.) ஆடாதாடிலது அம்பாத்திரேறாது
ஓடாதொருநாளு மோயாது—தேடரிது
சிற்றறிவாற்காணாது சிந்தைமகிழ்ந்ததனையு
முற்றுணர்வோர்க்கொன்றாய் விடும். (௰௫)

விருத்தம்.

உடுதகில்மூக்கைநீக்கு முவமைபோலுணர்ந்தநீங்க
வடுதவவசனந்தவுபா வாடையைப்புழுக்குமாப்போ
லிடுதவங்கமலத்தில்லென் றேற்றிடப்பாவந்திரும்
முடுகுவாராறில்மேலோன் முஹப்பத்திலாவாரன்றே (௰௬)

பஃறொடைவெண்பா.

ஆவாரவனியின்மே லானவறுசைக்கட்டு
போவார்பிதற்றனம் போகாமற் றேபாதன்று
சென்றுதொழுவார்கமலத் தில்லெல்றசத்தநலங்
கண்டுதெளிவார்ஹக்காஹு வென்றமுள்ள

நிச்சயத்தைக்காண்பார் நினைவுகலங்காதிருப்பார்
நற்செயலிலேமனத்தை நாட்டுவா ருட்சிபத்தை
நாடியிருப்பார் நானுமல்லநீயுமென்று
தேடியிருப்பார் தினம் (௧௫)

கலிவிருத்தம்.

தினமாநமரொளிகண்டிறை திருவாசலைநோக்கி
புனமானமென் றுடலானதி லுயிரானவை கூறு
மினமானசொல் விருநாசியி லியங்கும்வழி நூடே
சொனமாமணி நடுவேசுட ரொளிவந்துமெய்சூழும் (௰௬)

சூழும்மொளி கண்டும்மெய் தனுக்காமலிருந்தேன்
ஆளும்மிறையேயுன்னை யறிந்தேனுனதறிவால்
மீளும்முயர்மெய்ஞ்ஞான விளக்கானதறிந்தேன்
நாளுந்திருமணிமந்திரம் நாடார்நரகாள்வார் (௰௭)

வெண்பா.

ஆண்டநரகத்தி லாகாமலந்தாத்தே
வேண்டுஞ்சுவர்க்கபதி மேவாமற் — கூண்டிறைவன்
போராசையாலுழன்ற பெருங்கமலத்[illegible]ாள்திறந்தே
தீதாறுகாண்பார் தெளிந்து (௰௮)

தெளிந்துவரம்பெற்[illegible]றேனைத் தின்புவியோர்காலங்
கழிந்தவாமென்றவ[illegible]த யாக்குவார் — ஒழிந்ததுகண்
டுன்னைபுணராம லுழ[illegible]ற்றேனெங்கோவே
மெய்யையிகழா திரு[illegible] (௰௯)

என்னை[illegible]யாம விட்டு[illegible]யிலாசைபெருத்
துன்னைமறந்தே னுல[illegible]யானே — முன்னமே
ஆதமக்கவெல்லவர்க்கு மறிவளித்த தன்னையல்லித்
தாதெமக்குவேறுமுண்டோ சொல் (௨௰)

விருத்தம்

சொல்லதிசமானபல தோத்திரமறிந்தே
நல்லவருமுள்ளெழுத்தில் நாவிலொன்றைநாடி
வெல்லரிதுமேனியை விசுவதிப்பதன்றி
யெல்லவருமெங்குமோ ரெழுத்தெனவிசைத்தார் (௨௧)

(விருத்தம்) எழுத்தைவாசித் திசைத்திடுநாசியிற்
சுழர்த்திவீசச் சுழன்றெழும்வாயுவைக்
கழுத்திலேற்றிக் கருத்திலடைத்தபின்
பெழுத்துநாலும் வெளிவந்துதோற்றமே (௨௨)

தோற்றஞானச் சுடரொளிகண்டபின்
மாற்றும்வேறு வகையிதற்கில்லையென்
றேற்றிமூலத் தெழுநதகமலத்திற்
காற்றைபேவிக் கலைத்துவெடித்ததே (௨௩)

வேறு.

வெடித்தமூலக் கருத்திலெட்டெழுத்தினை விசைகொண்
டெடுத்தபோதிரண் டெழுத்தினைக்கமலத்துள் விருத்திப்
பிடித்தநாலிரண் டெழுத்திலோர் பிரிவுகொண்டெழுப்பி
விடுத்தபோதந்திச் சுழித்துலாஹூவென விடலாம் (௨௪)

வேறு,

விட்டபோதுலாயிலாஹ விதியில்லாமை நீக்கியே
வெட்டிநா லிரண்டிலோ ரெழுத்தினை யிருத்தியே
மூட்டவாங்கி யோதிமூக மூன்றுநாலு லோக்முத்
தொட்டிராம லெங்குமுள்ள சோதியின் னிலங்குமே (௨௫)

பஃறொடைவெண்பா.

இலங்கும்பொருளதனை யெல்லவருங்காணகிலோ
நலங்குதனியாவதனை நாடார்கள் விலங்கிலங்கள்
பத்தாறேழிருபத்து நான்குநூறாயிரத்தில்
வற்றுமலநீக்கு மறைப்பொருளைக் கற்றோர்கள்
காட்டினார்பாரெனவே காதைவளைத்துபதேசம்
பூட்டினரென் றெனவே போதமுற வாட்டமது
சூழவனத்திலொரு சோம்பியிருந்தாப்போ[ல்]
மாவிருக்கு மனிதர்காள் ஏழைதனை
ஐவாய்வெருட்டி யவதேப்போயினத்து
மெய்யானவோர்கிணற்றி லேவிழ்த்து பொய்யான
வேர்பிடித்துத்தூங்க வேங்கை[illegible]ருக்க
எர்பிடித்தகொடியையிரண் டெலிநறுக்க காலதனிற்
அக்கினியுந்தேளு மரவுமறக்காய்ந்த
சக்கரக்கோடாலி தான்மழுவும் தெக்குமிதில்
வந்திருப்பதென்றுமல் மானிடரேயுங்கள்மனச்
சந்தோஷித்தாலேன் தளம்புகிறீர் முந்தவரும்
வேங்கைமேவுத்தாம் விழுங்கிணறுமேதினியா
மேங்கிப்பிடித்தகொடி யிந்நாளாந் தூங்குமதில்
நருக்குமெலிசிர்மதியாம் நான்றதங்கீழ்வந்
திறக்குமொளிநாங்கபுறக் குட்படுத்தப் பெறக்கழிது
பார்த்துணரும்போதுனக்குப் பாழுண்டோவாழ்வுண்டோ
தோத்திரமுண்டோ தனையுண்டோ வேற்றுமையொன்
றில்லாநெஞ்சே யிரவுபகலற்றிடத்தில்
நல்லாளைத்தேடாப் நபத்து. (௨௬)

நேரிசைக்கட்டளைக்கலித்துறை.

நல்லானைத்தேடி நவிலவொட்டாமலிந் நானிலத்தில்
வல்லானைபோரும் விளையாட்டுமாய்மனை யாள்மருட்டுஞ்
சொல்லானமக்களுஞ் சுற்றமும்வீடுஞ் சுகவுடம்பும்
எல்லாமினிவந்து கூடுமென்றேநெஞ் சிசைந்ததுவே. (உஎ)

விருத்தம்.

கூடினேன்கவலைக்குள்ளே நடந்தேனிக்குவலயத்திற்
றேடினேன் அவலமென்றே யிருந்தேனிற் றிருவுளத்தை
நாடினேன்கமலத்துள்ளே கவிமாப்பொருள்நாடியபின்
பாடினேன்கமலத்துள்ளே பரமானந்தம்பார்த்திருந்தேன் (உஅ)

கட்டளைக்கலித்துறை,

பார்த்திருந்தேன்பர மானந்தச்சோதியைப் பண்டொருநாட்
காத்திருந்தேனுன்றன் காணுதகண்ணிற் கறப்படைந்து
பூத்திருந்தேனங் குருவுபதேசம் பொருந்தியபி
னேத்திருந்தேன்மகிழ்ந் தேனுடலேறப் பிரிசமுற்றே (உகூ)

பிரிசமுற்றேயுயி ரானவையெங்கும் பெரும்பொருளை
யரிசமுற்றேநெஞ் சறியாதநாளடி யென்றனக்கு
வரிசையுற்றேகுரு மாருபதேசம் வருந்தியபின்
னரிசம்விட்டேன்கடந் தேனறிந்தேன்பர மானந்தமே (கூ௰)

அறிந்தேனிறையை ய[illegible]யாதநாளி லன்மலப்பட்
டிருந்தேன்குருவந் துபதேசங்காட்டி யிருத்தியபின்
வருந்தேன்பல தோன்றும் அவையென்மன திரில்லை வையகத்தைப்
பொருந்தேன்புறமகற் றிட்டேன் நிறைபரி பூரணமே. (கூக)

விருத்தம்.

பரிபூரண வகைதானுயிர் பலவும்மவ னுளவோ
வரிபூரண குருவேயினி யருள்விருள மகிழத்
திரிபீதிடை நெய்யுஞ்சுட ரெரிதீச்செறி வதுபோ
லிரிதாவுயி ரெங்கும்மவ னொளியாமென விண்டார் (கூஉ)

விண்டார்குரு வேயொன்றினில் விளைவானதுகேளி
ருண்டார்சில அசனம்மஃ தொதுக்கும்வகை பேதோ
அன்றீரிரு பிளப்பாயதை யஞ்சாகவே வகுத்து
நன்றாகவே யருள்தூயவ னதம்மது பொசிக்கும் (கூகூ)

வேறு.

பொசித்திடுமெனவேநன் றுப்பப் புகட்டிடவருண்மையாக
வசத்துயிரேசஞான மருனுவதேதோவென்னி

விசைத்துயிரேசஞான மிருந்தமெய்ப்பரிசாமெட்டுத்
திசைக்குளோரறியச்சொன்னோ மென்றவர்செப்புவாரே (௩௪)

செப்புவீருண்மையாகத் திருப்பதஞ்சேர்வதெப்போ
தப்பினிலமைத்ததொன்றை யறிந்தமெய்க்குருவேசொல்லி
ரிப்புவியனைத்துமேக னொளியெனவிறைஞ்சும்போது
செப்பும்நீரிலறவன்பாதஞ் சேரலாஞ்சிறப்பொன்றியான் (௩௫)

ஈயில்லாத்தேனையுண்டே யிரவினிற்றுயிலுமாத்தர்
காயில்லாக்கனிகள்கண்டே னென்றுரைசுழறவேண்டாம்
பாயில்லாக்கப்பலோடிப் பறக்குமூல்கலிமாத்தன்னில்
லாயிலஃஹாலைநீக்கி நாவிலொன்றறிந்துகொள்ளே (௩௬)

நாவினையிரண்டொன்றாக்கி நடுவினிலருளைநோக்கி
நூலினைப்படித்தோர்தங்கள் நொடியினைக்கேட்பாயாகில்
மேல்வினைவாராமீண்டு மெய்வினைதொலைந்தேபோகுங்
காலனும்வாரான்வந்தாற் கழுத்துயிர்பிடிக்கமாட்டான் (௩௭)

பிடித்திடாவகையேதாலே பெரியவன்றனக்கேயாகு
மடுத்தவனிவனுமென்ன வுயிர்த்திடாதேகியந்தேன்
கடித்தவாய்துடைத்தாற்போலே கடுகவிங்கேகாவென்று
வடித்தலைபிடிக்கவல்ல வநாதியங்கழைத்துக்கொள்வான் (௩௮)

அழைத்திடும்பரிசுகண்டு அனாதியேயென்[illegible]யின்று
விழித்திடும்வகையேதென்ன மேலவனிறையிலே
வொளித்துயானிருக்கும்போதி லுணர்த்திடுமடியான்றன்னை
யழைத்துவாவென்னச்சொல்லி யருளநாவில்லையென்றான் (௩௯)

நாவினில்வசனம்பேசும் நலமறியாதமூடர்
பூவினில்மனமிருந்த பொருளையான்றேடிப்போந்தேன்
ஆவினில்நிரப்பிநின்ற வரும்பொருளறியாநெஞ்சஞ்
சாவதுகடனுமென்று சஞ்சலக்கடலிட்டாழ்த்தான் (௪௰)

சஞ்சலக்கடலிட்டாழுஞ் சமயத்திலருளைப்பூட்டிக்
கஞ்சொலைக்கேளாப்பாவி கவிழ்ந்தனன்கடலிலென்றே
யஞ்சலென்றெடுத்தேயென்னை யணைத்துஉஸ்தாதுதாமு
மெஞ்சொலைக்கேட்பாயென்றே யிறையருள்காட்டினாரே (௪௧)

இறையருள்காட்டிப்பூட்டி யிருத்தினார்புவியின்மீதே
மறைவெளியதனைக்கண்ட மானிடக்குருவேயென்றித்
தறையினிலொருவரன்றித் தானவனமைத்தவெய்யோன்
பிறையினிலழகுமில்லை யென்றியான்பேசவாரே (௪௨)

பேசினேன்பெரியோர்பாதம் பெருகவேவணங்கிநின்று
கூசினேனிறைவன்பாதங் குறித்தவரிவராமென்று
பூசினேனறிந்தோர்ஞானப்பொருளினையெடுத்துக்கொண்டே
யேசினேனெறிந்தாற்போல்நம் மிருதயத்தடைந்ததன்றே (௪௩)

எடுத்தவரொழிந்தஞான மிருதயக்கமலத்துள்ளே
படுத்தவரிவராமென்று பணிகினேனிவர்கள்பாதம்
கடுத்தவர்தெளியவென்றன் காதிலேயுபதேசித்துத்
தொடுத்தவரிருக்கச்சொல்ல தொழிலின்மேலிருந்ததன்றே (௪௪)

அந்தியாளிருக்கும்போது அவனியேழண்டமேழுங்
கண்டுயான்மகிழ்ந்தபோது களித்தவக்கமலத்துள்ளே
யிந்தியான்பேறுபெற்றே னினியொருநாளும்பாவங்
குன்றுவிக்கனுகாதென்று குருவருள்தப்பிலேனே. (௪௫)

(வேறு) தப்பிலாமலேயிருந்த தனியனென்றெதிர்த்தபோ
தப்பினோடடைக்கநாரக யண்டவாவடங்கலு
மொப்பிலாமலேயிருந்த யோகமேறுமெய்யுளே
செப்பொணாத வாசலைத் திறந்துகண்டறிந்தவன் (௪௬)

(வேறு) திறந்தனன்கமலத்துள்ளே திருவொளிவடிவைக்கண்டு
மறந்தனன்பூமிவாழ்வை மலசடலனைத்துஞ்சேர
விறந்தனவிறைவனன்றி யிருந்ததோர்நில்லாகாலே
யறந்தனையுல[illegible]மார்ந்த நவர்களுங்காமிராவர் (௪௭)

(வே[illegible] காமிரானபேரிலுங் கடிந்தகாயிர்நாமெனு
மாவிகாவலாகுரூன் னறிந்துமெய்யுணர்ந்தனையுந்
தாவியேறுமந்திரஞ் சாற்றொருஞானதகரணியிற்
பாவியானதாயிரம் பலம்பெறுவமாருத்தமோ

வேறு.

ஒருத்தர்தம்பொருட்டிறுமேல் புல்குயிரனைத்தும்வாழும்
பருத்திசேர்பருப்புநீங்கப் பரிசுவேறுருமாப்போல்
வருத்தமுமெலிவுநீக்கி மறைபொளிபரிபவேண்டிக்
கருத்துவேறுகாவலனைக் கமலக்கண்டிறவாய்நெஞ்சே (௪௯)

கொச்சகக்கலிப்பா

நெஞ்சேயுனக்குநலம் நீயும்நாளுமெதிர்த்தகா
லஞ்சேனொருத்தருக்கு மாதிதனக்கேயொழியப்
பஞ்சதுநெருப்பிலகப் பட்டதுபோற்பாவமெல்லாம்
பிஞ்சோடிப்போயிருக்கப் பேறுபெற்றாய்நெஞ்சமே. (௫௰)

பேறதவிராமற் பெருங்கமலத்தாள்திறந்து
வேறுமொருத்தருக்கு விள்ளநினைந்தாயில்லையே
யூறமருவிபன்னீ ருண்டுகளித்தேமகிழ்ந்து
தேறுமொழிகள் திகைத்திருந்தாய்நெஞ்சகமே (௫௧)

விருத்தம்.

திகைத்தேயொளி நிறைத்தேவருஞ் சினத்தாலதைமறைத்துப்
புகைத்தேயிருள்பெருத்தேவரும் பொருட்டாலதைவெருட்டி
யகத்தேயொருவெளித்தாரையுண் டடைத்தேயதுவெடித்தாற்
பகுத்தேயறியிருத்தேவரும் படைத்தோனொளிகாண்பார் (௫௨)

காண்பாயிறைபொளியானது கல்பாகியகடலில்
வேம்பானதுகைப்பாமதில் மேவுங்கனியமிர்தம்
மேம்பாடலனைத்தும்மிறை யுபிசாஸ்திரறவசனர்
தேம்பாலுணவதிலும்முறைத் தெவிட்டாமலுண்டிருப்பார் (௫௩)

(வெண்பா) உண்டுகளித்திருப்பார் ஒவெழுத்தையெண்ணுமவர்
கண்டுகளித்திருப்பார் ஞானக்கா—வென்றமது
தானுகிநின்றபயன் லத்துடலில்வந்தனுருந்
தேனுகுமென்றே தெளி (௫௪)

விருத்தம்.

தெளிந்துமகிழ்ந்தொரு மந்திரமாமொளி தேடியசெங்கமலம்
குளிர்ந்துவிரிந்து நிமிர்ந்தெழுந்... கோணமதாறதிலும்
அழிந்திடுமிந்திர சந்திரனோடிறை யனுமதரோடுமமர்
ஒழிந்ததுவுந்தி நிறைந்திறைபோனொளி யொன்றென நண்ணுவரே

நேரிசைக்கட்டளைக்கலித்துறை.

நன்றானவாதி யநாதியைநித்தனை நாயகனை
ஒன்றானஞான விளக்கானவுத்தம னொளியாய்
நின்றானையெங்கு நிரம்பியஞானக்கனை நிச்சயமாய்க்
கண்டாலொழியத் தெளியாதசித்தைக் கலக்கங்களே (௫௫)

தெளியாதசித்தை கறுப்பகலாது ஜெகத்திலுள்ளோர்
வழிபாடறிந்து வணங்காதநான்மறை யோனுரைத்த
மொழிபானதத்தி யவனுமமோதி முயன்றிருந்தால்
ஒளிவானதெங்கனு மோரவியாய்நின்று முற்றவர்க்கே (௫௬)

(நேர்) உற்றவர்பாத முணர்ந்திடுநாளி லொருபொருளைப்
பற்றிடுவேறு பழக்கமியார்களிப் பாருலகிற்
சுற்றவரோடு கலந்திடுவேளையில் ஞானமென்று
சித்தமுயிபாழொரு பாம்புமதாகத் தெரிசிப்பனே (௫௭)

(திரை) தெரிசனையாக விருக்கின்றபோது திருமறையோன்
பரிசனையேதென்று பார்த்திருந்தேனையிப் பாருலகில்
அரசனைமெய்யுள் ளறியாதமாந்த ரலைவதல்லாற்
புருஷனில்லாத மடவாள்சுகித்த பொருளொக்குமே (௯)

விருத்தம்.

பொருளையுணர்ந்தவர் போதமழுத்தவர் புவியிலகத்திறைவன்
அருளையுணர்ந்தவர் தயவுவருத்தவ ரறிவிலிருந்தவராம்
வெருளையகற்றவர் வெளியிலிருந்தவர் வெகுபிழைசெய்தவர்தம்
மிருளையகற்றுவ ரெவருநினைப்பவ ரிறையருள்பெற்றவரே. (௧௰)

(வெண்பா) உத்தாரமன்றி யுணரோரொருபொருளை
மற்றாருங்காணார் மயக்கத்தாற்—கற்றோர்கள்
ஆரணத்தைப்போதி பலவார்கவெங்கும்பரி
பூரணத்தின்சீரறியாப் போது. (௧௧)

(விருத்தம்) சீரொளிவுசித்திரங்கள் செய்தவடிவென்றே
பேரொளியிலுள்ளபலன் பேசவரிதாகும்
ஓரொளியிலுள்ளதனி லொன்றிலுமடங்கா
வேரொளியிலென்றவ [illegible]பவிதியாதே. (௧௨)

வேறு.

எம்புவார்புவியிலுள்ளோ ரிறைவனைத்தொழுதநாளைக்
காண்பநாமென்றுநாடிக் கருதுவார்கமலத்துள்ளே
வேம்பனையிபுலி சென்றும் வினையினைவெருட்டிப்பார்க்கச்
சோம்பினோர்காண்பதில்லை யென்றவர்தெர்குத்துச்சொல்வார். ௧௩

சொல்லுவார்லியேமேனிச் சுக்முறும்பாசத்தாலே
வெல்லுவாணிபுலிசும்மை வெருட்டிவான்பயப்படாமல்
வில்லுநானுடம்புறாகாய் விழியம்பாற்றொடுத்தக்கெய்தால்
இல்லிலரண்டெழுந்தொன்றுமேல் யிறைவனைக்காணலாமே (௧௪)

காரொன்றுவடிவதான கடாட்சயருபத்தனைக்
காணவேயாசிக்கொண்டார் காலனுரச்சங்கொண்டு
பேணியேவேதநாலும் பிதற்றுவார்பிராணியெல்லாஞ்
சாணையேவளர்க்கலுற்ற சமமதென்றறிந்துகொள்வே (௧௫)

கொள்ளுவாரீமானுள்ளோர் குறியெல்லாம்புகலக்கேண்மோ
நன்றுவார்நாயன்வைத்த நடுவினிலருளைநோக்கி
வின்றுவார்கலிமாத்தன்னை விளாந்தரண்டெழுத்தானுன்னி
யெள்ளளவெனினும்நீங்கா ரியக்குவார்மூச்சிற்றோடே. (௧௬)

மூச்சிலேறுடியக்கிநின்ற முடிவில்லாப்பொருளைநோக்கிப்
பேச்சிலேறுடிநறவனுமங் கொண்டுடல்தன்னைப்பேணி
யேச்சுமெல்லாரவனை யிருதயத்திருந்துவாழுங்
காட்சியைக்கமலக்கண்ணுற் கண்டுளமகிழுவாரே. (௬௭)

(வெண்பா) ஆதிமறைபாம லந்தரத்திலேகிவந்த
சோதிநபிக்கிறைபோன் சொல்லுவான்—வேதனைப்ப
டவ்வற்கலிமா வறுநான்கிலேசொழுக்கைச் [ட்
செவ்விலுனைப்போர்க்கே திறம். (௬௮)

திறம்வளருநந்நபியைத் தேனென்றிருந்தோ
ரறம்வளருநற்செயலோ டன்புவைத்தா—லறுசிடத்தி
லஞ்சுடருங்கூடி யனல்சொரியுங்காலையிலே
யெஞ்சுடாதென்று விறை. (௬௯)

(விருத்தம்) ஒன்றவனுரைத்தபடி புன்மையிறருலும்
அன்றவரளிக்கருள்வ ரானவலர்மெய்யிற்
செல்லொளிதிரம்பியெழு செக்கமலத்தாடே
கண்டவர்தெளிந்ததினைறுக்கென்றனாசெய்வார். (௭௰)

(வேறு) ஹக்காம்நபிநம்மொழிமாற கல்பானபல்லிடலிற்
செக்கானதுபோலஞ்ச திருக்காயெழுமூச்சில்
தக்காதலிபொன்றண்டதில் நிரண்டுளலாமுஞ்
சிக்காமலெடுத்தோதிடு மென்புகழ்செய்தார். (௭௧)

(வேறு. இடப்புறமியக்கும்போதி விறையவனொளியைக்காட்டுங்
கடற்பெரும்வலதுபாசம் ஹக்கிறகுனைக்காட்டுந்
நடப்பெருப்புவிலைநோக்கிக் சந்திரவொளியைக்காட்டு
மடற்பெரும்வானைநோக்கில் வல்லமையதியலாமே (௭௨)

விருத்தம்.

அறிவாக வரும்நாளி லகல்வான வகைநோக்கி லறுசானதிற்
குறியான முஃலீம்கள் குணமான கலிமாவிற் குணமாவதிற்
செறிவாக வயினாலு கறுபான தினமூச்சு திருநாமங்கொண்
டெறிவார்க ளியல்பாக விருவாசல் வழியூடியக்குமவிப்பு. (௭௩)

அலிபான தொருநாலு மகலாதுன் னுயிர்நீங்கு மதினாலோழிந்
தொலியாக வருநாலு மறமோதுக் கலிமாவி லுவையானதின்
மலிவாகவருநாளு கறுபெதென் றுணரார்கள் மலங்காபிராப்[வார்
மெலியாதசறுபெதென் றுணர்வோர்கள் லெநு ன வெளிசேரு

வெளிசேரும் படிஞானச் சுடரஞ்சு வெளிகாண்பர் வெகுதாகிய
மௌனிசேரு முயிராவ தொருநாளு மொழியாது வுடலானதில்
வழிநாளு மறைபோது கலிமாவி னொளிசேரும் வகையானதிற்
றெளிவாக விருநாலு கறுபான திருநாம மெழுத்தில்லின்மேல்()

(வேறு-)இல்லெனநிரப்பிநின்ற வெழுந்தினைக்கமலத்துள்ளே
மெல்லவேயிருத்திவாக்கி வெறுப்பினையகலநீக்கிச் [ல்
சொல்லினுஞ்சொல்லாவண்ணத்தோத்திரஞ்செய்வீராகி
கல்லெனும்நயனத்தூடே கதிரவனொளியதாமே. (௭௬)

கதிரொளிபூமியேழு கனைமோடறுசின்மேலு
மதிரநின்றெழும்புஞ்சத்த மறிவினலறிந்தபோது
முதிரொளிபடைப்புக்கெல்லா முதலவனியேயென்று
மெதிரொளிஞாயத்தூடே யிறைஞ்சுவர்ஃமூமினோ()

வேறு.

மூமினனமூமினும் முசிலிமானபேர்களும்
ஆமினுகதின்றவாழு மஞ்சிலொன்றைநெஞ்சறச்
சேழமானதிக்கிரூநிநிற்குஞ்சேவன்மெய்யுளே
சாமநாவினும்நிறைந்த நக்குவாவைச்செய்வரோ. (௭௮)

வேறு;

தக்குவாவுக்குத் தவஞ்செயுமூமினோர்தமக்கு
மெக்கிமாயுள்ள நலங்களுங்கண்டதிலிடையில்
மெய்க்குவார்தவ மஞ்சையும்விரும்பிடவல்லோர்
தக்குமாவெனு முத்திராபெறுமாந்தர்தாமே. (௭௯)

தானமார்தவ மஞ்சையுந்தவத்துடன்றேடா
ஈனமாய்விடு வார்தக்குவாவினுக்கேறார்
வானமார்தவ மஞ்சையும்வகைப்படியுணர்ந்தோர்
ஞானமார்தக்கு வாவெனுநல்வினைகாண்பார். (௮௰)

நல்லாடமென் றறிந்தவர்நாடியகலிமாச்
சொல்லலாம்பல சுருதிகண்டுணர்ந்தவர்தொடர்ந்தால்
வெல்லொணுத்தவ மஞ்சையும்விசுவதித்திடுவார்
எல்லையார்தக்கு வாவெனுமியல்பினைக்காண்பார். (௮௧)

பஃறொடைவெண்பா.

காணுவுடம்பதற்குக் கருதிஞ்சுவாத்தியங்கள்
வேணுமெனமிண்டகள் வேண்டுவது மூனாற்
றடிந்திருக்கவேணுமென்று சாற்றுவகைப்பார்க்க
மெலிந்திருக்கவேண்டி விரும்புதலும் மலிந்துடலிற்
கூவத்துவேணுமென்று கூறுவதைப்பார்க்க
ஆபத்தில்லாமலமைகிறது மேலவர்க்குப்

நல்லாதாரனென்றுபேர் நாட்டுவதைப்பார்புவியிற்
பொல்லாதாரனென்றுபெய ரேற்பதுவும் எல்லாநாள்
நீமோன்றனந்தேடித் தவாவிரப்பதைப்பார்க்கில்
ஈமானோடேமவுத்தாக் கென்பதுவும் மூமீனுக்
கஞ்சுதவமும் மறிந்தாலொழிந்ததுவும்
பொஞ்சுமனதைக்காணூர் புரிந்து. (௮௩.)

விருத்தம்.

கருவற்றஎழுத்தையுன்னிக் கமலத்தினழுக்கைநீக்கி
யுருவற்றவெளியைநோக்கி யொன்றுபட்டிருப்போர்க்கெல்லாங்
குருபத்தாருள்வார்மூலக் குகையினிற்கலிமாத்தன்னைப்
பருவத்தேபயிர்செய்வோர்க்குப் பலனுண்டாம்பெருகத்தானே

நாசிக்குமேலேநெற்றி நடுவினின்றுடுஞ்சோதி
பூசிக்குள்நாதம்போல வுள்ளம்விட்டகன்றிராது
வாசிக்குங்கமல்வட்ட வடிவினைத்தாக்கிப்பார்த்துப்
பூசிக்கவல்லோர்பூமிப் பொருளைவிட்டகல்வாரன்றே. (௮௪)

பொருளொருபொருட்டுமல்லப் பூமிவிட்டகல்வாரானு
மருளொருபொருட்டினாலே பவனியைநோக்கிற்பொன்னு
மிருளைவிட்டகல்வாரில்லை யென்றிலங்கியகலிமாக்கொண்டு
வெருளதைநீக்கிமேலா சனத்தில்வீற்றிருப்பாரன்றே. (௮௫)

வேறு.

முகத்துக்கண்ணை முறுக்கித்திருத்தியே
யகத்துக்கண்ணை யறுத்துப்பிளந்தபின்
வகுத்தசோதி மணிவிளக்கென்னுளே
தொகுத்துப்பார்க்கச் சுகம்பெற்றாய்நெஞ்சமே. (௮௬)

பகுத்துமெய்யைப் பலபலகூறதாய்
வகுத்ததொன்றை மணிவிளக்காக்கியே
கவிழ்ந்துபார்க்குங் கமலவகாரத்தை
நிமிர்ந்துபார்க்க நிலைபெற்றாய்நெஞ்சமே. (௮௭)

கணங்கள்பூதங் கலந்தவனத்திடை
சுணங்குபோலச் சுருண்டுகிடந்ததை
யிணங்கிமெல்ல வெழுப்பியிருத்தியே
வணங்கிப்பார்த்து மகிழ்ந்திடுநெஞ்சமே, (௮௮)

அல்லிராப்பக லானசுவாசத்தை
மெல்லமெய்யில் விளக்கொளியாக்கியே
நல்லதென்றுயிர் ஞானக்குருபால்
சொல்லிற்பார்க்கச் சுகம்பெற்றாய்நெஞ்சமே. (௮௯)

வேங்கைமெய்யை வெருட்டிப்பிடிக்கக்கண்
டோங்கிமெள்ள வுயர்த்தியிருத்தியே
பாங்கினூடு பரமசுவாசத்தைத்
தூங்கிப்பார்க்கச் சுகம்பெற்றாய்நெஞ்சமே (௧௰)

ஒப்பிலாப்புன லாதியவாவியிற்
பூவிலாமணம் பூத்தகமலத்துள்
வாயிலாவண்டு வந்துமணங்கொள
ஈயில்லாத்தே னினிப்புற்றாய்நெஞ்சமே. (௧௧)

மக்கம்வாழு முகம்மதர்சொற்படி
சொர்க்கவாழ்வுஞ் சுகமுமிழந்துபோய்
நெக்குமான நெருப்பில்விழாமலே
ஹக்கனோடு கலந்திடுநெஞ்சமே (௧௨)

ஜாயிலென்ற தகைமையைநீக்கியே
வாயிலன்றி மனத்திலொன்றாக்கியே
ஆஈஊவென் றறிவாலறிந்தபின்
காயிலாக்கனி கண்டிடுநெஞ்சமே. (௧௩)

முறைபிக்கென்ற மிடிமையைநீக்கியே
விறுபிக்குமரு பூபெனுஞ்சேதியைப்
பறையக்கல்பு பணிவிலடயாளபின்
கறுயத்தோடு கலந்திருநெஞ்சமே (௧௪)

நீயுநானும் நினைத்திடுங்காலையி
லேதுநான்கண் டிறைஞ்சவனீதியாய்
நீயுமென்னுள் நினைப்பதுதானின்ன
நேரமென்றே யிருப்பதுகண்டுளம் (௧௫)

கட்டளைக்கலிப்பா.

நீயும்நீருந்திருத்தியமெய்யுளே தேனும்வந்துசிறந்ததுகண்டியான், ஆயும்நீரையகற்றியயிர்தம தாகவுண்டவர்பாதம்பணிந்தபின், காயுமன்றிக்கனிந்தகனிபழங் காண்பர்கண்டு களித்தகுருபரன், நீயவென்றிபயிர்துன்னுங்காலையி லேதுநான்கண்டிறைஞ்சவனெஞ்சமே. (௧௬)

நீதியாயுள்ளஜாதியனைத்தினும் நீதமல்திநினைப்பவர்கல்பிலூ, மாதியானபொதுவஸ்துவீதெனு மஞ்சிலொன்றையறிந்தவர்கூறவே, யோகிநாலையுணர்ந்திடுநாளெல்லா முள்ளமோடித்தளர்ந்திடுகாவென்னுஞ், சோதியாய்வருமவ்வெழுத்தோன்றினைத் தொடர்ந்துதாணச்சுகம்பெற்றாய்நெஞ்சமே. (௧௭)

விருத்தம்

ஞாலமாயொளியாய்ஞானச் சுடரதுதன்னைநோக்கித்
சீலமாயெழுந்தசிவன் றிறமதுதெரிசிப்போர்கள்
சாலமாமறைகளோதுஞ் சாத்திரச்சழக்கெல்லாஞ்
ஞாலபோல்வயிறுதோன்றத் தொடங்கினதொழிலாமென்றார் ()

அண்டமுமவனிதானு மதிர்ந்திடமறைகளோதிக்
கண்டமுங்கடுத்துநோவக் கதறியமைந்தர்கேண்மோ
என்றுமுள்ளவனைமெய்யு ளெழுத்தினுலிருத்திப்பார்க்குந்
தொண்டருக்கடிமைசெய்தாற் சோலாஞ்சுவர்க்கந்தானே (௯௯)

வெண்பா.

பேய்த்தேரைமெய்யென்று பேதலித்தமான்போலச்
சாத்திரங்களோதித் தளராதே—சாத்திரத்தைக்
கற்றறிந்துவிட்டாற் கதியாகாதப்பொருளைச்
சற்றறிந்துபாராய் தரித்து (௱)

எறும்புகடையெண்பத்து நாங்குநூறுயிரத்து
ஞுறும்பொருளையாரு முணரார்கள்—வெறும்பானை
பார்த்திருந்துதூங்கார் பசிகளிஞற்பாவிகடாம்
சாத்திரத்திங்கேடவார் தான். (௱௧)

அழுக்கறுத்துமெய்யை யறிந்தோர்கள்முன்சென்று
சழுக்கறுத்துநீகேளு சொல்லுவா—ருளக்கருத்தில்
வஞ்சகத்தைநீக்கி வான்பொருளையென்றுமவர்
தஞ்சமெனக்காட்டுவார் தான் (௱௨)

வேதியர்கள்சொல்லதனை மெய்யென்றிராதவர்க
ளாதிநிலையிதென் றறியார்கள்— ஓதிமிக
வுள்ளத்திரும்பொருளை யுணராதவர்நாளைக்
கள்ளர்படும்பாடெனவே காண். (௱௩)

மெய்யிலேயுள்ளதொன்றும் விள்ளார்கள்வேதியர்கள்
பொய்யிலேயுன்மனதைப் பூட்டுவார்—கையிலே
கண்ணாடிவைத்தாலுங் காணுதகப்பொருளை
விண்ணூர்த்திருப்பாரே மேல் (௱௪)

நேரிசைக்கட்டளைக்கலித்துறை,

ஈமான்றனக்கு மிசுலாநெறிக்கு மிதனடுவே
தேமாங்கனியுண்டு செப்பரிதேசெப்பி லஞ்சிலொன்றை
ஆமாமெனக்கவி மாவாலெழுப்பி யறிந்துணர்ந்தாற்
சீமான்றனம்பெற்று வாழ்வீரெனநபி செப்பினரே. (௱௫)

நிலை.

அறநாங்கோடட்சரக் கோடாரிகொண்டநிர்த்தளத்தில்
மறிவானவஞ்ச மனத்தைத்தறித்தலயற்புனமாய்ச்
செறிவானதினி லமுதானவித்தினைச் சேரநட்டுப்
பொறிவிண்களைபறித்தாற் பெறலாஞ்சொர்க்க பொற்பதியே ()

நேர்,

மூன்றுங்கெழுத்தில் முதலுங்கைவிட்டு முதிர்ந்தெழுந்த
பின்றுங்கெழுத்துப் பிரியாதுநித்தெழும் பேரெழுத்தில்
அன்றுங்கிடைவொன்றதனூலேகமலத் தழுக்கறுத்து
மன்றுன்றுபோதமுற்றுற்பெறலாஞ்சொர்க்க வாழ்பதியே (௱௭)

நிலை,

வலியான்திருவொளிக்குள்ளேயுயிர்கள் வளர்ந்திருவாய்
பலியாவணக்க மறியாதநாளினின் மேலவன்றன்
கலிமாவைநெஞ்சித் தவிராமலொல்லெனக் காணவைத்தான்
சலியாதிருமனமே யிறகுதுண்டு தாபரமே (௱௮)

வலியான்பொருளை புணராதமாந்தர் வணக்கமொன்றும்
பலியாதுதானேப் பகையாகுமென்றிறை பாழ்படும்பின்
கலிமாவிளக்கின் சுடர்நான்கிலொன்றதைக் காட்டிவைத்தான்
சலியாதிருமனமே யிறகுதுண்டு தாபரமே (௱௯)

வலியான்திருவுளத் தர்லேயெழுத்த வகியெழுத்தைக்
கலிமாவினுள் ஹறதிலொன்றுவலைக் கண்டறிய
மெலியாநிறைவ னருளால்மனத்தை விளக்கிவைத்தான்
சலியாதிருமனமே யிறகுதுண்டு தாபரமே (௱௰)

அலிபாவெழுத்தாயி ரெல்லாம்நிறைந்தண்டரண்டமெல்லாம்
மலியாவெழுப்பித்தோ டமாகவைத்தவன் வஞ்சமறக்
கலிமாப்பொருளதை நாலங்கறுதினிற் காட்டிவைத்தான்
சலியாதிருமனமே யிறகுதுண்டு தாபரமே. (௱௰௧)

அலிபோடுலாமுந் திறல்சேயுமீமு மனுதிமுன்றுள்
மெலிவானதாலில் விடுத்துவைத்தானதை விண்டறியக்
கலிமாவோடேகன் திருநாமத்தேன்விட் டருந்தச்சொன்னான்
சலியாதிருமனமே யிறகுதுண்டு தாபரமே (௱௰௨)

வலிதானவைந்தெழுத் தட்சரமாதி வடிவென்றன்னி
மெலியாமலாறு நாறுயிரக்கோடிவிஸ் லேறுருவாத்த
கலியாவினுக்குமனக் கண்ணுடியைச்சிக்க லாடச்சொன்னான்
சலியாதிருமனமே யிறகுதுண்டு தாபரமே (௱௰௩)

அவியாவெழுத்திடு முன்னேயுதித்திடு மட்சரத்தில்
வலிசையிருந்தஹறும்பெதென்றன்மனக் கண்டிறந்து
கவிமைப் பொருளைக் கமலத்துள்ளேபயி ராக்கச்சொன்னான்
சவியாதிருமனமே யிறைவனுண்டு தாபரமே (௱௰௪)

அவியானதுக்கு வடங்கலுமாச்சிதெங் ஙன்புகொண்டே
மெலிவாயில்றவ னருள்ஞானம்பெற்று வினைகளறக்
கவிமாலைமூலக் கருத்தாவெழுப்பிப்பின் கண்டறியச்
சவியாதிருமனமே யிறைவனுண்டு தாபரமே (௱௰௫)

(நேர்) உப்பிட்டுப்பூட்டி புணர்விட்டுத்தாளிட்டு உள்ளுயிரி
னைப்பிட்டுவைத்த தறித்திலனேயஞ்சி லொன்றதனைத்
தப்பிட்டெடுத்துயர் ஞானச்சுடரெழுந் தாமரையிற்
செப்பிட்டிருக்கின்ற கண்ணாடிவட்டந் தெரிசித்ததே ()

விருத்தம்.

போதமிலாவகையாசறடத்துப்புலம்பியமூடர்களே
வேதமெலாநீரறிந்துதெளிந்துவிளம்பியதெப்படியாம்
ஆதமிலாததனத்தையறிந்தவ னுதளியிட்டளவே
பேதமிலானையறிந்துதொடர்ந்திடிலெப்பொருளுந்தவமே ()

வெண்பா.

ஆரணத்தினூடே யடங்காத்தப்பொருளின்
காரணத்தாலஞ்செழுத்தைக் கண்டிருப்பார் — பூரணமா
யோரெழுத்திலுற்றவறி வானந்தவெள்ளத்தின்
நேரெழுத்தாயென்றும் நிறைந்து (௱௰௮)

ஒளியிலொளியாகு மோரெழுத்தும்பேரெழுத்தாம்
வெளியில்வெளியாகு மெய்ஞ்ஞானம் — தெளிவதனு
லங்கமதுபார்த் தறிவுற்றசிவானந்த
மெங்கும்வழுவா யிலங்குமே (௱௰௯)

சத்திவருத்தாதே தானவனேனாட்டாத்திருக்கச்
சத்திவருத்துக்கும் பாராதே — பத்திபொழிந்
தின்பத்தைநாடாதே யேகன்ப்ரகாசிப்பன்
ஐம்பத்தோராட்சரத் தடங்கு (௱௨௰)

உத்தமனைத்தேடி யுழன்றதனுஞ்செய்தாலும்
சத்தவத்திலென்றுமனை மேலுந்தே — சித்திடல்
தேடினைநாடாதே செல்வத்தைப்பாராதே
[illegible] (௱௨௧)

கொண்டுண்ட ஞானக் குருவருள்வரப்பொருளை
நான்கண்டேனென்று நவிலாதே—ஏனென்றால்
வெல்கலத்திறனை வெருவாய்முழங்குபகம்
பொன்கலத்திறனைப் பொருள். (௱௨௨)

அரியபெரும்பொருளை யாரறிவாரம்புவியிற்
பெரியோரறிவரெனப் பேசிவிடு—சிறியவனுன்
செப்புவார்முன்சென்று சிந்தைதனிலத்தனையு
மொப்புரவோடுற்றேனென் றோது. (௱௨௩)

விருத்தம்.

வாசிவாகூனுரவென்றோதி மலரும்வாயுவானந்த
நாசிகாதுவாயடைத்து ஞானதித்தமந்திரம்
பூசிவாயுள்ளாகவோடி மூலநாடிபூடுபோய்
ஆசிவாயசோதிவட்ட மாகநின்றலாவுமே. (௱௨௪)

வேறு.

இருளிலோர்பொருளிருந்தால் யாவருங்காணார்கண்ணி
லிருளுமெய்விளக்கதாக்கி ஞானநெய்யதாக்கிப்
பொருளினைக்கனலாய்ப்பற்றிப் புத்தியைத்திரியதாக்கி
யருளின்மேற்கொளுத்திப்பார்த்தா லனைத்தையுங்காணலாமே. ()

தனியனை நிகரில்லானைச் சரியிணையற்றதினை
மணிதிரண்டொளியாய்நல்லோர் மனத்தினி லுறைகின்றானைக்
கனியினுமினியசொல்லாற் கசடறத்துறவோர்க்கென்றுந்
தோன்றிய மூர்த்தருள்சிங்காரச் சுடரொளிகாணுந்தானே. (௱௨௬)

வெண்பா.

ஞானத்தெளிவுளத்தி னந்நிலையைக்கண்டாலெல்லாழியதி
தேனற்றுறைதெளியா தெனவே—யானதோர்
ஆகமுஞ்சொன்னா ரருமதிறகுருகுரு
நாதருஞ்சொன்னார் நமக்கு. (௱௨௭)

மனத்துக்குநாவினுற்ற வாக்கிரங்கிட்டிடையோ
ரினத்துக்குமெட்டா திருப்பவனை நினைத்துப்போய்க்
காட்டிலேதேடினாற் காணுதகாணுமுடல்
வீட்டிலேதேடாய் விரைந்து. (௱௨௮)

உள்ளெழுத்தைப்போதறியா மூடரேயுனைக்கண்ட
வெள்ளெழுத்தைப்போலேவிளம்புகிறீர் வெள்ளெழுத்தைப்
மாற்றிப்பிடிக்க வகையறியா மூடர்[illegible]
லாத்திறக்கைத்தபுளி யாம். ([illegible]௯)

விருத்தம்

பேறுபெற்றன பேர்களுக்குணா பேசிவைத்த ரகத்துளே
யாறுநிற்றலும் நீறுபட்டெழு மங்கியென்றுணா செய்யநாம்
வேறுபட்டுழறு மானிடற்கிதை விள்ளொணாதென வுன்னியே
யூறுமூச்செறி யுபாயமுச்சுடர்கண் டுள்ளமோடி மகிழ்ந்தவே, (·)

திரண்டசிற்சை தெளிந்தோருண்மை தெளிந்தபின்றுணா செய்யு
நா, னிருண்டநெஞ்சி லிருந்ததொல்லை யிலைசர்ந்ததீறுக் கிரங்கி
யே,யருண்டபாவ மடைந்தநீங்க ளிலேற்றுவெந்நா காளுமுன்,மு
ரண்டசங்கி லெழுந்ததொன்மை முயன்றுதேடிக்கொள் வீர்களே

(வேறு) எம்பிரானுகவுள்ளத் தெழுந்துலகுயிர்கட்கெல்லாந்
தம்பிரானுகநின்ற தனியனைத்தப்பில்லாமல்
மூம்பிரானவனென்றோது மூலமந்திரத்தையுள்ளத்
தன்பினுணாவல்லோ ரனைத்தையுங்காணவல்லமே (௱௰௨)

(வேறு) உருவத்தமிலிவந் துலைறந்திடுமுளத்திற்
கருவிற்றுறாதனொளி கண்டவர்செப்பாவல்
குருதிற்றைபொய்காமங் கொலைகளவோடைந்தா
மிதுவன்றிமற்றுள வெலாமிறைபொறுப்பான், (௱௰௩)

பனிப்பகைபரப்புமொளி பற்றியசிரத்தே
டினிப்பதுகசப்பது விருக்குமிதபத்துட்
டனித்தவனிறந்தசர ணத்தையுணர்வீரால்
மனித்தரறியாதநெறி வாழ்வுபெறுவீரோ, (௱௰௪)

நேரிசைக்கட்டளைக்கலித்துறை.

வானவர்வானு மலைகடலோகமற் றெவ்வுயிரு
மீனொடுபார்மின் னொளிபனியாவுமுண் டாகுமுதற்
கோனொடுகோனவ னுண்டில்லையென்னுமக் கூரிருளிற்
றுனியங்காம லிருந்தானிறைநுக்கத் தாயுறைந்தே. (௱௰௫)

நுக்கத்துமங்கோ ரலிபாகநிற்றபின் னுங்மிறையோன்
பக்கத்திலோரலி பாவெழுந்தேயுட்பாய்த் தோரலிபால்
ஒறக்கிந்தமூன்றுக்கு மல்லாதெழுந்த நடங்களுக்கு
நுக்கத்தாமாமலிபா னதுமூன்றுக்கும் வித்துமொன்றே, (௱௰௬)

வித்தொன்றுதித்து முளைமூன்றுகப்பு விரித்தெழுந்த
முத்தொன்றுபச்சை பவளமொன்றுய்வரும் முச்சுடராம்
பத்தெ[illegible]புத்தியி[illegible]க்கிவைத்தோர்க்கும் பாரதந்திலை
பெத்தெ[illegible]ர்றகுமத்து மெங்குமுண்டே, (௱௰௭)

உண்டாமுதலெழுத் துக்குமுன்னுக்கத்தோன் றுள்ளதிந்தா
ரொன்றுளுமொன்றுக்கு மெட்டாதுயர்நுக்கத் தில்லையென்று
மிண்டாலும்விள்ளத் தொலையாதுகாணுந்த மெய்ப்பொருளைக்
கண்டாலுங்கண்ணுக்கு காணாதமெய்க்கடன் காணுதற்கே (௱௩௮)

காணுமெழுத்துக்கெல் லாமுதலானது ஹங்கலியென்
றுரேணுன்றறிவொன் றருமணியொன்றறி வாலறிந்து
பேணுமெழுத்திதைக் கள்ளாரிகள்போறி வாளரென்றே
சேணிலடியே னுனைத்தேன் றுவக்கந் தெரிந்தவர்க்கே, (௱௩௯)

(நிரை) துவக்கமுதலெழுத்தா முன்னிறைவெரு அல்லிபத்தோர்
துவக்கமுறுந் துயர்சதமானதைத் தானறிபா
ரியக்கமிலைத் திருத்தாக்கத்தி லொன்றுவந்தெய்துமலி
பதற்குமுன்னுக்கத் தல்லாதிலைவேறு மோரட்சரமே, ()

(நேர்,) அட்சரமேது மிலாதிறையோனுறைந் தவ்விருளி
லட்சிவஞானக் கண்ணுற்றாக்கூனமி னுள்ளத்திலோரி
பச்சைமுத்தொடு பவளமுங்கூட்டியே பாவித்திறை
தற்சொருவாகக் கண்ணாடிக்குளொன்று தலைப்படுமே, ()

(நிரா,) தலைப்படுநெற்கமலத் தனி ளிறைவனைத் தான்றெரிசித்
தலைப்படுநாமென் றறிவேனு மென் றுளச்சமெய்தி
யுலைப்படுத்தாஞ் செய்சருவினொடு சருதுகண்டுளமகிழ்ந்து
துலைப்படுமெத்தைத் தெளிப்பணருந் துயாமற்றே, (௱௪௨)

விருத்தம்

துயரங்கொடங்கிலறவன் சுயசொரூபத்தெரிசனையும்
றயரும்படியவனென் செய்வனதுவுமதுசெய்வன்
உயருமிறையனைதயுள் ளுவந்தோதலொடுவேமிந்
தியரும்பிறையமுதும்மதுவும் புகலரிதே (௱௪௩)

அதிருந்தொனியென வங்கிலறவனன்பினைநோக்க
எதிருஞ்சுருவதனுக்கிறை யிடும்போகுமதுவென்
றதிரும்பணியிலமையோர்நயி யனைவோரொடுமொழிகள்
முதிரும்முலகுயிருமமுறை முறைசெய்திறையாமல், (௱௪௪)

மால்கொண்டதிலேகென்றதை முஹம்மதெனவோத
ஆவென்றதிலேநின்றவ னரிராசதவிதமூர்
ரேறுவென்றதிறுவொள்ளுளுடேன் நிசைரிஞ்சிவாமத்
தாலென்றதிலேநின்றவன் றுணைகவெழுத்தான், (௱௪௫)

வெண்பா,

எழுந்தாலையாவிறையோ னென் [illegible] றமலி
விழுந்தாவியெல்லாம் விளைந்ததே—எழுந்தோனை

வேதமாமென்றே விளையுஞ்சடத்தின்குரு
ஆகமாமென்றே பதி, (௱௪௬)

நேரிசைக்கட்டளைக்கலித்துறை,

அந்தப்பெருந்தலைத் துக்குள்நம்மாதிநின் றுசிக்கின்றச்
சந்தப்பெருமொழி போலெங்குமாயொரு சத்தமெழ
வந்தாற்றெழுமணிக் குள்ளேயுயிர்கள் வளர்த்தவனைச்
சந்தித்துக்கண்டே யிறைஞ்சிடும்பேர்க்கொரு தாழ்வில்லையே, ()

பொங்குங்கிருபைக் கடலுக்குளோரொளி பூரித்தெழுந்
தெங்கும்பெருஞ்சுட ராய்நிறைந்தேநின் றிலங்குமதைப்
பங்கிட்டொருமணிக் குள்ளேபலவும் படைத்திறைபோன்
றங்குமிடங்கண் டிறைஞ்சிடும்பேர்க்கொரு தாழ்வில்லையே, ௱௪௮

சந்தவிருத்தம்,

இல்லென்னுமெழுத்துவந் திருக்குமத்தலத்தையும்
அல்லிராப்பலுமற்ற ரூபரூபமானதுஞ்
சொல்லுகின்றநான்மறையுந் தோற்றமுமொடுக்கமும்
நல்லவைதுர்வினோர் தமக்குரைக்கவேண்டுமே, (௱௪௯)

ஆதியோவநாதியோ வ...துமாகநின்றது
சோதியோநல்வேதமா றனுவேலாமுன்னுதித்தது
பாதியிரவோபகலோ தம் பிறைவன்யாவும்படைத்தது
வேதியர்பகுத்தெமக்கு விண்டுரைக்கவேண்டுமே, (௱௫௰)

வெண்பா,

மிக்கசிறியோர்க்கு மெல்லியர்க்கும்வினைருக்குஞ்
சற்குருவினுபதேசம் சாற்றரிது—மக்கரதி
வாகாபெடுத்துரைத்தார் வான்பொருளைக்கண் டிறைஞ்சிச்
சாகாமற்செத்தவர்க்கே தான், (௱௫௧)

நேரிசைக்கட்டளைக்கலித்துறை,

தானந்தவமுந் தனக்குபதேசித்த சற்குருவுந்
தேனினமிர்த மொழுகியவாசமுந் தித்தியென்றே
கோனின்றருந் திருநடமானசெக் கோலுமென்னுள்
யான்கண்டவனே டிசைந்தேனெந்தலங் காண்கிலனே, (௱௫௨)

விருத்தம்,

காற்று...ராகஞ்செறி கனைகாதமும்வேங்கை
நீத்தாத...மாயிலாம்பிற மன்னுகமும்வெள்ளை
ஆத்தானவெளிக்குள்விளைந் தவனுதமுமிருளாம்
பார்த்தாலிவையுஞ்சுப்பிறை பாதத்தருமுத்தாய், (௱௫௩)

முத்தானதகஞ்சாயுள்ள முகத்துக்கிருவிழியாம்
பத்தானவிழிக்கெழு பார்வைக்கொருருப
மெத்தாவிறைசெய்தானிறை யென்றேயெவருக்குஞ்
சற்றாகிலும்பேசத்தரு மற்றானவனென்றார் (௱௩௪)

நேரிசைக்கட்டளைக்கலித்துறை,

ஆதியவிபங்கனுதிருக்கத்தென் றருளிறையோன்
சோதியொளிவந்து நாதமென்றேயின்னுஞ் சொல்லுவன்கேள்
ஆதியொளிதந் பவளமனுதி யழகுபச்சை
சோதியொளிவெண் டாளமதாய்வந்து தோற்றிடுமே (௱௩௫)

தோற்றநம்மாதிலையத் தாயெனலாத் துய்ய சுடர்விரிந்து
காற்றெழுஞ்சிவ னனுதியென்றெங்குங் கலந்துருவாய்
ஆற்றெழுஞ்சோதிநம் மையவென்றேபறி வாலதிந்து
பார்த்திலதைப்பேசவுற்றேன் பரஞானம் பாவுதற்கே (௱௩௬)

ஆதிநபியென் றதித்திடுமாசிக் கனுதிமறை
சோதிமுழக்க மிருமூன்றுங்கூடிச் சொருபமுன்னின்
ஞோதியனைத்தும்மை செய்ததற்கொண்ணும் வாமமெறை
நீதிபெறவேங்கு நின்றானிலைதந்தொண்றுநீங்கலற்றே (௱௩௭)

நீங்காவுயிருக்கு ளுள்ளாதிவித்தில் நிறைந்தருளோ
யாங்காரமூல மனுதியென்றேப[illegible]ராங்கிப்பல
பாங்கானசோதி பணமெங்குநின்ற பாராதந்தியென்
றோங்காரமெய்யி லுனாத்தேன்றெரிசித் துணர்பவர்க்கே(௱௩௮)

நிலை.

உணரும்நம்மாதிலையப் பூவெனனுமரு ளுட்கலந்து
புணருமனுதிலையத் தேனென்றுபேரிடும் புகழுறப்
பணரொழுஞ்சோதிநல் வாசமென்றேபருத் தோதலுற்றேன்
குணமொழுங்கானினுக் குள்ளேதெளித் துண்மைகொள்பவர்க்கே()

தெளியுமிசக்குநம் மாதிமுன்னுட்டேடரி சித்துவரு
மளியுமுள்ளாசிக்க னுதியென்றேயறி வாலதிந்து
வளியுமுற்சோதியை மஹ்னூக்கென்றேவருந் தோதலுற்றேன்
ஒளிதருமக்கத் திறனுல்நபிதலி லுற்றவர்க்கே (௱௪௰)

நேர்.

உற்றநம்ஆதம்றூஹ் வாவுடன்கூடியன் றட்கலந்து
பத்திருபாசம் பசுபதியான பராபரமென்
மெத்துமுள்ளாவியன் போடிவர்க்காமெல் நிலமபவாய்
முற்றுநன்மாமனஞ் செய்தேமுடித்திடு முச்சுடரே (௱௪௧)

வெண்பா) முச்சுடரிலொன்று முட்லோன்றிருநயனமொன்
றச்சுடரிலொன்றாகவு மல்லவென—மச்சுடரோன்
றந்தஞ்சமியுல்லா வொன்றருளிறைவனென்
றேதென்றஜானிலா னதே (௱௬௨)

இமையோரனைவர்க்கு மெம்பிரானின்ப
மமையாதமக்க வினைவருக்குஞ்—செமியாத
சின்னாக்கள்பூதமுனி தேவபசாசுக்குமின்ன
மன்னவனென்றேவருக்க லாம் (௱௬௩)

விருத்தம்.

வருத்தநாயனுக்கு அஞ்சு வசனமஞ்செழுத்தாயர்ந்
தருத்திமாரியவுத்தமுலைத தரித்தது தருலமும்
பகுத்தவுருத்சபூரேழுஞ்சில் பகரும்புறக்காளுக்கதாம்
ஒருக்கிராவில்முக்குரு ஞானத்தஞ்செழுத்துமே (௱௬௪)

அஞ்செழுத்து-அலிபு லாம்-மீம்-ஹேயுந்-தாலு-மாகலந்
தஞ்செழுத்தி காபு-ஆ யா-ஐனு சாதுமாயெழுந்
தஞ்செழுத்து-ஆவ-மீமும்-ஜுஹ சின்-காபுமாகவந்
தஞ்செழுத்துள்ளனைத்தையுமமைத்தனனம்மாதியே (௱௬௫)

ஆதியாதியெங்கிறீ ரனுதியென் றும்பேசுறீர்
சோதிசோதியெங்கிறீர் சொரூபமென்றுஞ்சொல்லுறீர்
ஓதியோதிமாய்கிறீர்நம் முடல்கலந்ததறிகிலீர்
நீதியாலதேதிலொன்று நீங்கள் பின்பொருமே (௱௬௬)

பாரும்பாருமாயெழுந்த பட்டணத்துவெட்டுரா
வாருமோதகுற்றமந்திரத்திறேகசைக்குள்ளுநீ
வாரும்வாசலேழையும் வழக்கறுத்தடைத்திடி
லாரும்பெருமற்றரூப ரூபமானதன்மையே (௱௬௭)

உண்மையானவஸ்தியா முறுதியாநம்மாதியாந்
தொன்மையானசோதியாஞ் சொரூபநான்குமறைகளாம்
நன்மையானதருமதாம் நமக்குறின் துணையுமா
மிம்மையாளுமருளுமெக்கி மாணிக்கமாதியே (௱௬௮)

வேதமென்றசமையநூல் விரித்ததொன்றுமெய்யுளோன்
றுதமொன்றஜாதியில்லான் றுனவிசாஞமொன்
றுதமிந்தமூன்றுமுன் றுனாத்தநம்பிறையதாம்
பாதமென்றதாரும்நீங்கள் பார்த்தறிந்துகொள்ளுமே (௱௬௯)

ஆதியானதுத்துமா மனாதிநல்லகல்புமாம்
சோதியானஐனுமாந் துலங்குஞானபோதமாம்
பாதிபாசபசுமனாட் பதிதிரண்டமல்க்குஞன்
நீதியானஹக்குபதேசப் பொருள்நிறைந்தசெல்வமே (௱௭௰)

பார்த்திருந்தபோதனைத்தை யும்படைத்தநாயகன்
ஊற்றெழுந்துபாயுமூற் றயர்ந்தசென்னியுச்சியுட்
காற்றெழுந்துவீசுமக் கருத்தையுன்னவல்லிராய்ப்
பூத்தலர்ந்தமுண்டகப் புதுமலர்க்குள்நிற்பனே (௱௭௧)

அட்டதிக்குமுட்டநின் றநேகநேசரூபமாய்
மட்டிடாதமானிடர் மனத்திலுற்றவல்லபம்
எட்டுநாலெழுத்திலத் திருக்குமென்றுமெண்ணியே
தட்டிமுட்டிப்பார்த்துளத் தயங்கிமாள்வர்கோடியே (௱௭௨)

கோடிகோடிமானிடர் குறைவில்லாதசோதியைத்
தேடிவாடிமாண்டனர் தெளிவுகண்டதில்லையே
பாடியெங்குமோசையாற் பரந்தெழுந்துநின்றதை
நாடியோரெழுத்திலே நவின்றபாருநம்மனே (௱௭௩)

நம்மிலும்நமக்குண்டான நற்குணங்கள[illegible]சிலும்
நம்மிலுந்தராதல நலத்திலெட்டுத்திக்கிலும்
எம்மிலுமெய்போடிலைசந்த விருதயத்துநினைவிலுஞ்
செம்மலாயிருந்ததைத் தெளிந்துணர்ந்துபாருமே (௱௭௪)

பஞ்சவன்னவுருவோடு பழகிநின்றமந்திர
மிஞ்சொலானமறைகளின்ன தென்றறிந்திசைந்திலேன்
செஞ்சொலால்நமக்குநாயன் செப்பிடக்கண்டன்புளோர்
அஞ்சிலொன்றையப்பனென் றறிந்துணர்ந்துபாருமே (௱௭௫)

அஞ்செழுத்துமுன்றெழுத்து மல்லகாணுமப்பொருள்
பிஞ்செழுத்துமுன்பிறந்து பேசும்நாலுவேதமாய்
நஞ்செழுத்ததாகும்நீங்கள் நம்பொருளுநாயகன்
அஞ்சுமாறுமற்றநம் மகத்துள்வந்திருப்பனே. (௱௭௬)

வேறு.

அறிவுமாதியொ டனாதிசோதியிலை யானமூன் றநமதுட்சுடர்
செறியும்ஆதமொட ஜாசிஉம்மருள் செப்புமீசானும்பிற்சட
குறியுமாயறிவு ஞானபோதமரு ளுற்றதஞ்சநமதுட்சட [மாம்
நெறியுஞ்சோமனுடு வருணயின்றெடமலென்றதஞ்சம்பிற்சடகு

மாவுந்தேனமிர்த பாலுந்தீருமதி வானநஞ்சமுதலாதியாம்
மேவுகாலுயிரி மாணிக்கமருள் கிண்டதஞ்சநம்மநுதியாம்
காவுநாளுஞ்சிலகாமஞானவொளி கண்டதஞ்சமெருஞ்சோதியாம்
ஆவுநாலுதய மானபாவுமறி வானகாலையில் விளங்குமே. (௱௪௮).

வெண்பா.

வேதநூல்சாஸ்திரங்கள் மெய்யிதனையன்றிவெகு
பாரநூல்கற்றூற் பலனில்லை—யேதொன்று
மில்லாதனைத்தேடி யிரவுபகலாகவொன்றுஞ்
சொல்லாமற்சும்மா விரு. (௱௪௯)
மூகற்றெரியும்நம்பிறனுல் மெய்முழுதுமேதெரிய
மகத்தெரியுஞ்ஞானத் தடிதெரியும்—அகத்தெரியும்
விண்ணுடிக்குள்ளிறைவன் வீற்றிருக்குமுட்கமலக்
கண்ணாடியைக்கண்டக் கால் (௱௫௰)

பஃறொடைவெண்பா

ஆதிமுதலோன நாதியவனொருவன்
[illegible]சிபெரியோனறியாத் தப்யோனென் ஜோதியதில்
நெய்யு[illegible]ரியும் நிறைந்தபாரஞ்சுடராய்ச்
செய்யெனமுன[illegible]வையுந் திருநுமா ஐய்யமதில்
ஒன்றின[illegible]டோன்[illegible]னைமயோன்றிருநயமாம்
ஒன்றாமதன்[illegible]குருவா மென்றமிழ
வித்தஞ்சிலமாமும் வேருமிலைமூன்றம்வெகு
புத்தியறிவிக்கப் பூண்டிறைவ னூற்றுரைப்பான்
ஆவென்றதின்பொருளை யார்க்கும்நவிலாதே
ஊவதனுக்கப்பாலென் றோதிவிடு • நலவர்க்கும்
பாலுமாம்பாலெரியும் பருவமறிந்தாலுனக்குத்
தேனுமாமென்றே தெளி (௱௫௧)

நேரிசைவெண்பா.

வன்னியுதித்காலறிவு திர்க்கும்வயிற்பொருமும்
அன்னமருந்த அறிவழிக்கு—மூன்னியுள்ளத்
தக்கினியைமூட்டி யழலெரியும்யோதெழுந்த
சற்குருவைக்காண்பாய் சமைத்து. (௱௫௨)

விருத்தம்-

நடுக்குமைம்புலன்களுஞ் சமைந்தபஞ்சபூதமுந்
தொடுக்கும்பாரவைகள்விவாசற் தொட்டறிவொடுரிசையு
மொடுக்குமித்தவங்கையவிட் டொடுக்கியுண்ணவல்லரோ
லடுக்குநந்திபாதநம் மனுதியானையுண்மையே. (௱௫௩)

உண்மையானநந்தியே யொளிதிரண்டமுஹம்மதா
மம்மையாருமாதியென் றறைந்தசொல்லகத்துளே
செம்மையாகநின்றுளா செவிக்குள்வந்தடைந்தபி
னெம்மையாளுமாதியானை யாளுவாத்ததின்மையே. (௱௮௪)

வெண்பா.

ஆதியோவனாதியோ வரூபமோசொரூபமோ
சோதியோவேக சொரூபமோ—நீதியிவை
யெப்பரிசிலிக்குதித்தா ரெம்பிறகுலென்றெனக்குத்
தப்பறவேசொல்லீர் சமைந்து. (௱௮௫)

நபியோநபிகள்திரு நாயகமோநம்பிறசூல்
சபியாதமுல்லாத் தலைமகனோ—புவியோர்கள்
பெற்றெடுத்தபாலகனோ பெரியவனின்றூனோமறை
கற்றுணர்ந்தோர்சொல்லீர் களித்து. (௱௮௬)

விருத்தம்.

ஆதிமுன் னுருபமா யனாதியங்க ரூபமாய்ச்
சோதிநல்ல சொரூபமாய்த் துலங்குகின்றதை காண்பவர்
காதியான அருமதா மனாதியான முஹம்மதாஞ்
சோதியான ரூபம்நின்று சொல்லும் [illegible] ருலென்றே. (௱௮௭)

இன்னமொன் றியம்புவே னிலைசத்தநின் [illegible]ம்
வன்னமா மறைக்குள்நின் றறைந்தசத்த மானதைச்
சொன்னதாகி லென்னவேறு தோன்றுமென்ன நம்முளே
யுன்னுமந்திர மொன்றுண் டுவத்தறிந்து பாருமே. (௱௮௮)

வன்னமான மந்திரத்தின் வாறுசொல்ல வல்லவன்
சொன்னமான சொர்க்கமுந் துலங்குவானும் பூமியும்
மின்னுமுறுச் குறுஞ்சையும் விரித்தமைக்கு முன்னமி
சொன்னதிக்கி ருகுமென்று தொல்மறைகள் சொல்லுமே (௱௮௯)

மண்ணுநீரும் கூடிவல்ல பத்திநோடு ரூபமாய்த்
திண்ணமான தாலும்வன்னி யுஞ்செறிந்து றாகதாய்
விண்ணுநாற திற்கலந்து மேவியஞ்ச மொன்றதா
யெண்ணுநம் முடற்திரண் டெழுந்தபேசி நிற்றதே. (௱௯௰)

அல்லிராப் பகலுமற் றிருக்குமத் தலத்துளே
சொல்லொணாத ரூபமாய்த் துலங்கும்நிங்கள் பாருமென்
றில்லல்லா விலைசத்தனென் றிருதயக்கண் ணூடியில்
நல்லபேர்கள் சொல்வரிங்கு நாமுனாத்த நல்லவே. (௱௯௧)

தந்தைகூறுந் தாயர்கூறுந் தாணிகூறுந் தரிபட
வந்தபாணி கூறும்வன்னி கூறுமூல கூறுடன்
விந்துநாத நாதக்கூடி மேவியொன்ற தாகியே
யந்தயாக நம்முட லணிந்தருப மானதே (௱௯௨)

தாதுமாவு மேலயச் சலத்திலுற்ற ரூபமாய்
ஹெறபுல்லாமுஞ் சேர்ந்துமே கிளர்ந்தனுசி ருனமின்
நாவமூல மாய்நிறைந் தடர்ந்திரண்டு நாசியி
லேய்விலாமல நிற்கும்நிங்க ளுட்கலந்து பாருமே. (௱௯௩)

லாகிரண் டெழுத்திலும் மிலாகிமுன் றெழுத்திலும்
ஓய்விலாம லும்முளே யொளித்ததேது சொல்லுமே
ம்மவியொன் திருக்கநாளும் விண்ணொடுங்கு நாளைநீ
ஆவிசாவ லாகுமுன் னறிந்துணர்ந்து கொள்ளுமே. (௱௯௪)

எழுபங்கபங்கடந் திருக்குமப் பதிக்குளே
[illegible]வாரி யேழுமலையு மேழுகோட்டை யானதில்
லேழுவா[illegible] லேழுசாவ லேழுபேருக் கப்புறம்
எழுதிரையுள் ட[illegible]க்கப்பால்நம் மில்லல்லாவந் திருப்பனே. ()

ஆதிபான கூறம்நல் லருமமேலெற் கூறுடன்
சோதிநாத னவனெளி துலங்குமச் சடத்துளே
பாதிராப் பகலுமற்ற பட்டணமொன் றுண்டதில்
நீதியாக நிற்குமொன்றை நீநினைந்து பாருமே. (௱௯௬)

ஆணிக்கோர்வை யாம்நம்மாதி யருளும் நூல வேதியர்
காணிக்காசுக் காசவேண்டிக் கண்விடாத நாய்கள்போல்
வீணுக்காக வலறமந்த மெலிவுகண்டு மானிடர்
பேணிக்கால் பிடித்தநல்ல பெரியபீனென் றோதுவார். (௱௯௭)

பேறுபெற்ற பேர்களொன்றும் பேசிடார் புவிக்குளே
யாறுபத்துக் கந்தையு முடுத்துமே லழுக்குமாய்
நீறுமெத்தப் பூசியே நினைவிலாத பேயர்போ
லாறுபுத்தி கண்டெல்லோரு முற்றிடா தகற்றுவார். (௱௯௮)

அஞ்சமாறு மோதடா ஐபாறுநோன்பு வையடா
வஞ்சகம் மிலாதபாறு லஞ்சையும் வணங்கடா
நெஞ்சில்வாழு மஞ்சிலொன்றை நீநினைந்து பாரடா
பஞ்சபாத கங்களான பாவமும் மில்லாதடா, (௱௯௯)

வெண்பா.

நீபெருகத்தில்றக்கால் நித்திரையுங்கோபமுமாம்
நீசுவர்க்கத்தேகாய மேலிறுத்தும்—நீபெருக
வுண்ணுமதுண்டே யுறங்காதிறைவையமனக்
கண்ணுறக்காண்பாய் களித்து, (உ௱)

விருத்தம்.

முத்திநிறம்பச்சை முதல்நற்பவளமொன்றே
யத்திலொருபச்சைநம் மனுதியவல்றுனென்
அற்றகமலத்தருளரு வாயுறைந்துதித்த
குத்துபுமுகியித்தினைக் குறித்துருப்படைப்பாய், (உ௱க)

பெய்யுமப்பனித்துளி பெருந்திறைவனூர்க்கு
உய்யும்றபிடவ்விருளி லற்றிருலுவத்தே
வெய்யவனெனத்தரு முகியித்தின்பாதஞ்
செய்பெனுமுன்செய்யுமத் திறத்தினைநினைப்பாம், (உ௱உ)

திறத்தொடுதமக்குந் தெளிவாலருமதுக்கு
முறைத்திருமனத்திலே றையுற்றிடுமக்காவி,
லுறைப்பொடுவருத்துமச் சுடரினிலுதித்த
நிறைத்துருமுகியித்தினை நினைத்துருப்படைப்பாம், (உ௱ங)

வேறு.

இல்லல்லாவைத்தெரிசித்தாரு மேற்றிறைஞ்சவல்லீரால்
நல்லலாபம்பெறுவீர்நாளை நாகவன்னியுட்ஹறூஞ்
சொல்லொணாத்வுன்மையைத் தொடர்ந்துகண்டிறைஞ்சிடார்
வல்லநாயனூணைநாளை வன்னிபுகுவதில்லமையே, (உ௱ச)

பருதிதிங்களுருகிநின்ற பழையசோதிநாதனைக்
கருதியாருமருவிநெஞ்சிற் கடறுத்துநோக்கிடார்
குருதியாறுபெருகியோடுங் கொடியதோஷிக்காணதிற்
கருதிவந்துபுகுவரென்ற துய்யநாயனோதினன், (உ௱ரு)

அண்டர்முனிவராளக்கர்பேய்க ளவனிமாந்தர்யாவருங்
விண்டமறையுந்தேடுநின்னம் வேத்தனுரொன்றறிந்திலேன் [சிட
தொண்டர்தெரிசித்துணரும்பொருளைத்தொடர்ந்துகண்டிறைஞ்
வண்டர்நாகில்வந்துபுகுவ ரென்றுவள்ளலோதினர், (உ௱சா)

உவ்வெழுத்துவித்ததா யுகாரமூன்றப்பேருமா
யவ்வெழுத்திலேமுளைத்த வேகனேகளூபமாய்ச்
செவ்வெழுத்தலைத்திலுஞ் சிறந்தமந்திரத்தைநீ
வவ்விலுற்றிருத்தியே மகிழ்ந்துபாருநம்முளே, (உ௱எ)

குருக்களற்றஞானமுங் குணங்களற்றசீஷனுங்
கருக்களற்றவித்தையுங் களங்கமற்றபுத்தியு
முருக்கமற்றநெஞ்சமு முணர்ச்சியற்றநினைவெலாஞ்
செருக்கமற்றசோதியைத் தொடர்ச்சியற்றதொக்குமே (௨௪௮)

வெண்ணீறற்றகோயிலும் விளக்கமற்றசெல்வமுங்
கண்ணீரற்றகிருபையுங் கணவனற்றமங்கையுந்
தண்ணீரற்றவாவியுந் தயங்குமித்தவகையெலாம்
நண்ணியுற்றபொருளையாரும் நாட்டமற்றதொக்குமே, (௨௪௯)

கோயிலாவதேதடா குருக்களாவதேதடா
பாவியாலமூடரே பாழிலேசெபிக்கிறீர்
லாயிலாகஇல்லல்லாகு முகம்மதுற்றசூலுல்லாவென்
றோய்விலாமலோதடா வுவந்துசொர்க்கம்புகுதலாம். (௨௫௰)

கையில்நின்றபொருளதனைக் காடதெங்குந்தேடுநீர்
மெய்யுள்ளஞ்செழுத்துமஞ்சு பஞ்சநல்விண்ணோர்களும்
பொய்யுள்வந்தடைந்தவைம் புலன்களைந்துபூதமும்
மையுள்வந்திருக்குதன்மை பார்த்தறிந்துகொள்ளுமே, (௨௫௰௧)

மையுள்வந்துறைந்துநின்ற பரமசாமியங்களை
மெய்யுளாருங்காண்பதன்றி வேறுதேடிக்காணொணா
தையுமுக்குணத்தையொன்ற தாக்கிநம்மகத்துளே
யுய்யுமஞ்செழுத்திலொன்றை யுந்துணர்ந்துபாருமே, (௨௫௰௨)

ஆறிரண்டுடங்குல மடர்ந்திரண்டுநாசியில்
ஊறதன்பிராணப்பக வியங்கியுச்சியூடெழுந்
தூறியொப்புவமையன்றி யுட்கலந்தநாதனைத்
தேறமோரெழுத்தினுற் றெளிந்துபாருமுள்ளுளே, (௨௫௰௩)

குருவெழுத்ததிங்கள்மூலக் குகையில்நின்றுசென்னிமட்
டுருவதன்பிராணபகலு மோடிமீளுந்தமதுமூச்
சிருபதங்குலத்திலெட் டிசைத்தகத்துள்வாங்கியே
பொருவதல்லிப்பனிரண்டங் குலப்புறத்திலோடுமே. (௨௫௰௪)

இத்தவாறதாகச்சற்று மிடைவிடாதிராப்பகல்
நித்தமாகவோடிமீளும் நிகரிலாதோனருளினுற்
சிந்திடாமலேகநாயன் நிக்கிலோடலற்றபின்
முத்தமாள்வதொன்றறிந்து முயலுநமதுள்ளருளையே. (௨௫௰௫)

நலத்தோடனையுப்பிறாவும் நாடியிச்சைகூடுமச்
சலத்திருளெனப்படைத்த தம்பிரானைநம்பியைம்
புலத்தைவென்றடக்கியைந்து பூதமுக்குணத்தையும்
மலத்தையுமடக்கவல்ல மாத்தர்காண்பதுண்மையே. (௨௱௰௬)

வேறு.

இருபதொடிரண்டாயிரத்தினிலுறைந்தே
கருவொடுதன்மூலக் கருத்திருருவாகித்
தெருவளவில்லத்தொளி சிரத்தளவுசென்று
ஊருவுகுமிழொடவனின் வத்தனவிறைந்தே. (௨௱௰௭)

நிறைத்தவனிரந்தரம் நினைந்தெலைமவனைந்தே
மறைந்தவன்மொழிந்தமவுனத்தொடுருவாகி
யறைந்தவனிறங்களறு பத்தாறொடுமுள்ளத்
துலைறந்தவனுவந்ததை யுரைத்திடவொணாதே(௨௱௰௮)

உரைத்திடவொணாதவொளி முச்சுடருமொன்றாய்ச்
சிரத்திடைவிழித்தெரிசனக்குருருவாகிப்
பரத்தவுயிருக்குளுடல் பணித்திடவுளத்தி
னிரைத்தவசனத்தியல் பிசைத்திடவொண்ணாதே(௨௱௰௯)

இசைத்திருவிழிக்கிடை யெதிர்த்திடுமதற்குள்
வசித்தெழுமணங்கள்மறு ரங்கள்கருவுள்ளத்
திலசத்திடுதல்கண்டறசில் நின்றருள்சொரிந்தே
யுசத்திறைவனென்றன் முனுவாவியேநிற்பானே, (௨௨௰)

நின்றிறைவனெத்தனினை யுக்குள்நினைவாய்லந்
தண்டாதியாதரு ளணிந்துறவதாகித்
தொண்டரிருகண்ணிடை துலக்கிடவணக்கிக்
கண்டவொருவட்டமுயர் சல்புறமகிழ்ந்தே. (௨௨௧)

வேறு.

தேனுமாவுஞ்சீனிபாலுஞ் செங்கனிவாழைக்கனியுமொரன்
னமந்திரமுட்கமலத் தருளுஞ்சேர்த்துக்குழைத்தியான்
ஞானமவனுமருந்ஞானத் தவமதையெம்பிறையவ
வினமாலையமூன் றும்போயெமதுளத்துவந்ததே. (௨௨௨)

எழுநம்மாதிமவுனமில்லென் றிருதயக்கண்ணுடியின்
ஒழுகுநீதிசருமெய்ஞ்ஞானத் தொளிதிரண்டருபமாம்
எழுகண்ணுறுதருமலினிரி லாறுபலவுமருள்செய்தே
தொழுமன்னுளிலஃதெங்ஙனும் சருதுகண்டுவந்தமே (௨௨௩)

உகந்தெனக்குளீரொன்றென வுட்கலந்தசோதியைப்
பகர்ந்திடிற்பராபரத்தி அந்தமானமந்திரம்
மகிழ்ந்துணக்கொணுதுலத்தில் வன்னிகளுங்கூடியே
கழிந்ததைத்தெளிந்துகாண்பர் காட்டொணுதுகாணுமே. (௨௨௪)

காட்டொணுதுகாணுகின்ற காரணநம்முச்சியி
னாட்டொணுதென்றுணர்வுகந்த ஆருணிக்குள்யாவருஞ்
சூட்டொணுதமாமலர் சாத்தெழுந்தமதுவையுங்
வாட்டொணுதென்றுடும்வல்ல டலைந்திடாதுகாணுமே. (௨௨௫)

அலைந்திடாதசைந்திடா தனைவருக்குமாகிநின்
றலைந்திடாதுவந்திடா துவந்தமேலவர்க்குணங்
கலைந்திடாதமூலநற் கருத்திலுற்றமந்திரந்
தொலைந்திடாதுவந்தெழுந்த சோதிநின்றிலங்குமே. (௨௨௬)

இலங்குமாமணிக்குள்வந் தெழுந்தகாமத்துயிர்கள்வந்
திலங்குமானிடக்குருக்க ளானமூலமந்திரம்
பலங்களானபேறுநற் பதவியுற்றதெம்முளந்
துலங்குஞானத்திருவாக்கச் சோதிவட்டமானதே. (௨௨௭)

வட்டமானதெட்டுமின்ப வடிவுசத்திசிவனுமாம்
பட்டமானதெட்டுருப் பாரதெழும்பராஞ்சுடர்
நட்டமானதெட்டுதன்மை நிலையற்றஞானமா
யிட்டமானதெட்டுநம் மிருதயத்திற்கொண்டதே. (௨௨௮)

இருதயத்தையெவ்வுயிர்க்கு விளங்குகின்றசோதியை
யுறுதிசற்றொழிந்திடாம லுயிரணைவத்துணர்த்தியே
யுறுதிசித்தமருளும்நந்தி யதிரூபத்தொளிதரும்
பெருதிமுத்திமருள்மெய்ஞ்ஞானப் பேறுபெற்றுவாழ்வமே. ()

காழ்வுழைக்குமாயையால் வருந்தலுறியாவர்க்குந்
தாழ்வுழன்றலாதிலைத் தலைமக்காட்பகரவுஞ்

சாருமூன்றெழுத்திலொன்றதாலெழுந்தங்கழிதலை
வேர்விமூன்றிலொன்றதால் விளங்கும்ஞானபோதமே. (௨௱௰)

வேறு,

ஞானமணிமாலைதனை நாவினுறப்பேசிக்
கோனுணர்வினுறுதி யாக்கொளுமவர்க்கோ
ஈனமனுகா திடரிலைப்பிணியுநீங்கு
மானமுண்டயிரிதனின் வகைபெறுமெனவே. (௨௱௧)

தானவனுமாத்தனெனன் றருமதனைக்கேட்டு
மேனவமுகியித்தின் விளம்பினாதம்போல்
யானுமெனுளத்திலறி வாலறிந்தறல்ல
தீனவர்க்கிசைந்தனன் றிருக்காட்சிதரவே (௨௱௨)

வேறு,

தத்தமதுளத்திலிறை விண்டவசனங்கள்தவிரா தெழுதிவைத்
தவர்களும், வந்திதைப்படித்துமகு ளுவுடனுவத்தில்மகிழ் வா
னதலில்செய்யுமவரும், முந்தவிதனைச்செவி படுத்துமவரும்மு
றையின் முற்றுமுறைகேட்குமவரும், அந்தநயினாரின்சபா அத்
தொடுஜெனத்துநக ரோடணிதீதாறுபெறுவார், (௨௱௩)

வெண்பா.

பெருமைக்குரியோனைப் பிறப்பிறப்பொன்றில்லானை
யருமைப்பெரியோனென் றூர்சொன்னார்—பெருமையுறுங்
காணிதவகோடிதரும் ஹக்காமெய்ஞ்ஞானமதைப்
பேணியுளத்தே பிடி, (௨௱௪)

நேரிசைக்கட்டளைக்கலித்துறை.

பெறும்பதினொலெழுலெழுத் தாகுநவாகிப் பிறக்குமல
குறக்கரும்பாறையின் மேற்றினமானமொ ரோய்வின்றியூர்ந்
தெறும்பதிநாலு கறுப்பொளிகாணு மிசைத்தழூக்
கறும்பதினொலொடு நான்குமொன்றாகப் பிடித்தவர்க்கே, (௨௱௫)

அருளொருநாளொன்றுக் காறெட்டுமூன்றெழுத் தாகுமதன்
னிருள்நும்பகலுமி நேரமுமகரிபொழுசா வருமளவும்
பொருவருமசெருபி ஜ்கர்பஜிறளவும்பரி பூரணமாய்
வெருளறுமாறெட்டு தன்னுறையாக விரும்புவர்க்கே, (௨௱௭)

விரும்புவருள்ளத் திலக்குமெய்ஞ்ஞான விளக்கொளியைச்
சுரும்பதினாட் டலக்கவென்றேழிச் சூழ்ந்ததுபோ

வரும்பலத்துள்ளத் தருளாலிறையவனைத்தொழுவோர்க்
கிரும்பிளம்பொன்வெகு மாத்துணையாலனிக் கிசைந்திடுமே(௨௧௭)

விருத்தம்.

இசைந்திறைவனுமம்பதி னெட்டுமொருமுச்சில்
வசைந்தெழுமெய்ஞ்ஞானமணி மாலைதொடுத்தே
குசிர்ந்தனிமுற்றுமுசி யாதினைமொழிந்தோர்க்
குசந்தலமீந்தரு ளுவத்தற்குமரனே, (௨௧௮)

மாமெருருகலைக்குறுகி வாரணுறிமீதே
இனவனெதிர்த்தடிமை செய்தகமலத்துள்
ஈனமதகற்றியிரு பார்வையுந்நிறைந்த
ஞானமணிமாலைதமு காதலினிசைத்தாய், (௨௧௯)

தானவனல்லாமலொரு தானவனமைத்த
வானவரல்லாமலொரு வானவனொழுந்தே
இனவர்களோடுபகை செய்வதையறுக்கும்
ஞானவடிவானென நமக்கிறையுணர்த்தான், (௨௨௰)

நமக்குளவவாகுமுவர் ஞானமதுபோலாம்
நிமக்களவுநீரிலிட நீரளவுமேலான்
நமக்குளளவாகியொளிர் சாமொழிபாத்தே
யெமக்குளவாகியொளி யென்குமுலறைந்தானே,(௨௨௧)

வேறு,

எங்குமென்றுமுள்ளவனெவர்க்குஞ்சிவனுங்குன்
றங்கமானதுட்கலந் தனேகனேகருபமாய்த்
தங்குநம்மனத்திலே தரித்தஞானமாமணி
மூங்குமாயாறப்பில்ஆல டீன்முடிந்தமுற்றுமே, (௨௨௨)

ஞானமணிமாலை.

முற்றுப்பெற்றது,

இஃது - இராமநாதபுரம் இரவுண்ஷிரப்புக்கடை
ப-மே-முகம்மது இபுறாகீம்சாகிபுமுயற்சியால்
குலசேகரம்பட்டணம் சக்கலாசாகிபுத்தம்பி யவர்கள்குமாரர்
அல்லாபிச்சைப் புலவரவர்களால்
இலக்கணவிலக்கிய வழுவறத்திருத்தி அச்சியற்றியது.